## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.254/2020.

Prosecution witness for P.W.17.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. அசோக். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.11.2025.

A2 absent. 317 Crpc petition filed. Others present.

முதல் விசாரணை

நான் மருத்துவத்துறையில் பணியிலிருந்து ஓய்வு பெற்று மருத்துவராக தொழில் செய்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் கடந்த 13.11.2019 அன்று அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது 108 ஆம்புலன்ஸ் மூலம் அ.சா.1 முதல் 3 மற்றும் இறந்துபோன காளிமுத்து ஆகியோர் சிகிச்சைக்காக வந்தார்கள். மேற்படி காளிமுத்து தன்னை அடையாளம் தெரிந்த இரண்டு ஆண் நபர்கள் கத்தியால் அன்று இரவு 8.30 மணியளவில் தனது வீட்டில் வைத்து தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு வலது பக்க நெஞ்சில் 3x1x3cm அளவில் குத்துக்காயம் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். அ.சா.1 தன்னை அதே சம்பவத்தில், அதே நேரத்தில் இரண்டு அடையாளம் தெரிந்த நபர்கள் கத்தியால் தாக்கியதாக சொன்னார். அவருக்கு வலது முன்கையில் 2x1x0.5cm அளவுள்ள சிதைந்த காயம் காணப்பட்டது. இடது பக்க பக்கவாட்டு தலையில் 4x1x1cm அளவுள்ள ஒரு சிதைந்த காயம் இருந்தது. இடது

முன்கையில் 2x1x0.5cm அளவுள்ள சிதைந்த காயம் இருந்தது. இடது கையில் 2x1cm அளவுள்ள சிராய்ப்பு காயம் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். அ.சா.3 தன்னை அதே சம்பவத்தில், அதே நேரத்தில் இரண்டுஅடைளயாளம் தெரிந்த ஆண் நபர்கள் வயிற்றில் காலால் உதைத்ததாக சொன்னார். தனக்கு வயிற்றுவலி இருப்பதாகவும் சொன்னார். அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அ.சா.2 அதே சம்பவத்தில், அதே நேரத்தில் தன்னை அடையாளம் தெரிந்த ஐந்து நபர்கள் கட்டையால் தாக்கியதாக சொன்னார். அவருக்கு தலை, கழுத்து பகுதிகளில் வலியிருப்பதாக சொன்னார். அவரை பரிசோதித்போது கீழ்க்கண்ட காயங்கள் இருந்தன. வலது பக்க முன்தலையில் 5x2x1cm அளவுள்ள சிதைந்த காயம் இருந்தது. அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். அ.சா.2 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று கருத்து தெரிவித்து நான் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ 10**. அ.சா.3 மருத்துவ அறிவுரையை மீறி வெளியே சென்றுவிட்டதால் அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து நான் கருத்து தெரிவிக்கவில்லை. அவருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ 11**. அ.சா.1 மருத்துவ அறிவுரையை மீறி வெளியே சென்றுவிட்டதால் அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து நான் கருத்து தெரிவிக்கவில்லை. அவருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ 12.** மேற்படி காளிதாசுக்கு நான் வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ 13**. மேற்படி காளிதாசுக்கு ஏற்பட்ட குத்துக் காயத்தால் இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு. இந்த பதில் எதிரிகள் தரப்பில் ஆட்சேபனையுடன் பதிவு செய்யப்பட்டது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

பொதுவாக சிதைந்த காயங்கள், சிராய்ப்பு காயங்கள் போன்றவை தரையில் கரடு முரடான பகுதிகளில் விழுந்து புரள்வதால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். 3x1x3cm என்பது 3 செமீ நீளமும், 1 செமீ அகலமும், 3 செமீ ஆழமும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன். முறையான சிகிச்சை எடுத்து உயிர் பிழைக்க நம்மிடம் மருத்துவ வசதிகள் உண்டு என்றால் சரிதான். அதனால் மேற்படி காயம் மரணத்தை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் இல்லை என்றால் சரிதான்.

4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.ஆ 13ன் படி இறந்துபோன காளிமுத்து சிகிச்சைக்கு வந்த நேரம் இரவு 9.35 மணி. அ.சா.2 வந்த நேரமும் இரவு 9.35 மணி. இருவரும் 108 ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டு வரப்பட்டார்கள். அ.சா.1 இரவு 10.10 மணியளவில் வந்ததாக விபத்து பதிவேட்டு நகலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக வரவில்லை. அவர் உறவினர் அ.சா.10 மூலம் அழைத்து வரப்பட்டார். அ.சா.3 இரவு 10.20 மணியளவில் உறவினர் மூலம் அழைத்துவரப்பட்டார் என்றால் சரிதான். தொடுவலியிருப்பதாக ஒருவர் சொன்னால் அது உண்மையா, இல்லையா என்பதை கண்டுபிடிக்க உபகரணம் எதுவும் இல்லை. ஆனால் அனுபவத்தின் மூலமாக என்னால் சொல்லமுடியும். தொடுவலியிருப்பதாக அவர் பாவனை செய்திருக்கலாம் என்றால் சரிதான்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2025.11.28 17:59:35 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.254/2020.

Prosecution witness for P.W.18.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. செல்வராஜ். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.11.2025.

A2 absent. 317 Crpc petition filed. Others present.

முதல் விசாரணை

நான் தற்போது செய்துங்கநல்லூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 16.11.2019 அன்று ஏரல் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது நிலைய குற்ற எண் 211/2019 இதச 147, 148, 294(பி), 323, 324, 427, 307, 302 பிரிவுகள் படியான வழக்கில் சம்பந்தப்பட்ட இறந்துபோன காளிமுத்து என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்துடன் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்று மருத்துவரிடம் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை சமயத்தில் மருத்துவருடன் இருந்து பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை சமயத்தில் உடலில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட ரத்தக்கறை படிந்த பழுப்பு நிற பார்டர் கொண்ட வெள்ளை நிற வேஷ்டி, ரத்தத்தில் தோய்த்து எடுக்கப்பட்ட பஞ்சு ஆகியவற்றை பெற்று நிலையத்தில் ஆஜர் செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். மேற்படி அலுவலுக்காக எனக்கு கொடுக்கப்பட்ட கடவுச் சீட்டு அ.சா.ஆ 14.

**குறுக்கு விசாரணை**

**இல்லை.**

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2025.11.28 17:59:43 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.254/2020.

Prosecution witness for P.W.19.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. செல்வம். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.11.2025.

A2 absent. 317 Crpc petition filed. Others present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது ஆழ்வார்திருநகரி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு ஏரல் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது 16.11.2019 அன்று நிலைய குற்ற எண் 211/2019 இதச 147, 148, 294(பி), 323, 324, 427, 307, 506(2) படியான வழக்கில் சட்ட பிரிவு மாறுதல் அறிக்கையினை தயாரிக்கப்பட்டு 147, 148, 294(பி), 323, 324, 427, 307, 302, 506(2) படி வழக்கு மாற்றம் செய்து அந்த அறிக்கையின் அசலை ஸ்ரீவைகுண்டம் நீதித்துறை நடுவரிடம் ஒப்படைக்க வேண்டி இரவு 12.30 மணியளவில் பெற்று கடவுச் சீட்டுடன் சென்றபோது நீதித்துறை நடுவர் விடுப்பில் இருந்ததால் சாத்தான்குளம் நீதித்துறை நடுவரிடம் 16.11.2019 அன்று 15.30 மணியளவில் ஒப்படைத்தேன். பிறகு 17.11.2019 அன்று காலை 10 மணியளவில் கடவுச் சீட்டு பெற்று பிரேத விசாரணை அறிக்கையை மேற்படி நீதித்துறை நடுவரிடம் பகல் 12.30 மணியளவில் ஒப்படைத்தேன். பிரேத விசாரணை அறிக்கை கொண்டு செல்வதற்காக எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு **அ.சா.ஆ 15**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கையை நீதித்துறை நடுவரிடம் ஒப்படைப்பதற்கு 15 மணிநேரம் காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரிதான். ஸ்ரீவைகுண்டம் நீதித்துறை நடுவர் விடுப்பில் இருந்ததால் சாத்தான்குளம் நீதித்துறை நடுவரிடம் ஒப்படைப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தில் சென்றாலும் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து சாத்தான்குளத்திற்கு சுமார் 20 நிமிடத்தில் செல்லலாம் என்றால் சரிதான். சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கைக்காக எனக்கு கடவுச்சீட்டு கொடுக்கப்படவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கில் ஏற்பட்ட காலதாமதத்தை சரி செய்வதற்காக கடவுச் சீட்டு மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 4ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2025.11.28 17:59:52 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.